1968 மார்ச் 30] [திரு. க. ர. நல்லசிவன்]

நடைபெற இருக்கின்றன என்று நினைக்கிறேன். இப்போது வீணாகி விட்ட 15 நாட்களை எப்படி ஈடு செய்ய முடியும் என்று தெரிய வில்லை. ஆகவே இந்த அரசாங்கமானது பரிட்சை ஆரம்பிக்க இருக்கிற தேதியில் இருந்து ஒரு 15 நாட்கள் ஒத்திவைத்து பரிட்சையைத் தொடங்க ஏற்பாடு செய்தால் அது மாணவர் களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதுபற்றி விவாதிக்க இந்த அவை நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல மாணவர்களின் மனதில் ஏற்பட் டிருக்கிற பயத்தைப் போக்க எந்த எந்த வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ அந்த அந்த வகையில் பாது காப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இப்போது இருக்கிற சூழ்நிலை கெடாமல், அமைதியும், ஒழுங்கும் பாதுகாக்கப் படும். பலவிடங்களில் அமைச்சரவையையும், அரசையும் கேவலப்படுத்துகின்ற வகையில் எழுதி வைத்திருக்கிறார்கள் என்றாலும், இரண்டு சாராருக்கும் மோதல் ஏற்படாத அளவுக்குக் காவல் துறையினர் அங்கங்கே பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாணவர்கள் பஸ்ஸைப் பிடித்து வைத்துக் கொண்டபோதும்கூட, அவர்கள் விருப்பப்படியே, அன்று பூராவும் இருக்கவிட்டு, சமாதானமான முறையில், மறுநாள் தான் எடுத்து வந்திருக் கிறார்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்க இரவு முழுவதும் போலீஸ் துறையினர் பாதுகாப்பாக காவல் புரிந்து வருகிறார்கள். அவர்களுடைய பயம் அகற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பரிட்சையை ஒத்திவைப்பது பற்றி பல்கலைக்கழகம்தான் முடிவு செய்ய வேண்டும். இன்று கல்லூரி முதல்வர்களை எல்லாம் அழைத்துப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேச இருக்கிறார். அவர்களுடன் கலந்தாலோசித்து முடிவு இன்று மாலையில் அறிவிக்கப்படலாம். எப்படி இருந்தாலும் அதுபற்றி அவர்கள் தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, இந்த அவையை ஒத்தி வைத்து நாம் விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. கு. சுப்பையா, திரு. க. ர. நல்லசிவன், திரு. செ. பாலசுப்பிரமணியன் ஆகியோர் கொடுத்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

(iv) நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மிளகாய் வற்றலுக்கும், பருத்திக்கும் நியாயமான அடிப்படை விலையை நிர்ணயித்தல்

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை யின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும் பொது

முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க மற்ற நடவடிக்கைகளை ஒற்றிவைக்க வேண்டுமென்று முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :—

"நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பிரதான பணப் பயிரும் ஏற்றுமதி மூலமாக சர்க்காருக்கு அன்னியச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கும் மிளகாய் வற்றலும், அதி முக்கிய மூலப்பொருளான பருத்தியும் இவ்வாண்டு விலை மிகவும் குறைந்த நிலையிலும் கொள்வாரற்றுக் கிடப்பதால் மேற்கண்ட பொருள்களுக்கு நியாயமான அடிப்படை விலை நிர்ணயித்து சர்க்காரே கொள்முதல் செய்யவேண்டும் என்றும் மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு மட்டிலுமே மிளகாய் வற்றல் ஏற்றுமதி லைசென்ஸ் வழங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்."

அதோடு, இந்த விஷயம் எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்ல விரும்புகிறேன். அந்த இரண்டு வட்டாரத்தையும் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு இந்தப் பணப் பயிர் மூலம் வரக்கூடிய வருவாய் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஒரு க்விண்டால் பருத்தி 250 ரூபாய் என்றால் இவ்வாண்டு ரூ. 140, ரூ. 150 ஆகக் குறைந்திருக்கிறது. அதுபோலவே வற்றல் ரூ. 600, ரூ. 700 விற்றது என்றால் இன்றைக்கு பழைய வற்றல் ரூ. 100-க்கும், புதிய வற்றல் ரூ. 140-க்கும் மேல் கேட்கவில்லை. வாங்கக்கூடிய ஆட்களும் வருவதில்லை. கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாக முன்பு வெளிநாடுகளுக்கு அனுப்பினார்கள். இப்போது ஒரு தனி நபருக்கு ஏற்றுமதி லைசென்ஸ் கொடுக்கப் பட்டிருப்பதால் அவர் அதிக விலை கொடுத்து வாங்க—போட்டி இல்லாத காரணத்தினால்—முன்வரவில்லை. இந்த இரண்டு பொருள்களுமே பணப் பயிர்களாக இருக்கின்றன. அதுவும் விற்காமல் இருப்பதால் விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடனைக்கூடத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கமே இவற்றை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். மில்களுக்குப் பருத்தியைக் கொடுக்க வேண்டும். இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவந்துள்ள காரியம் அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டதாகையால் அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து திரு. டி. மார்டின், திரு. கே. விநயகம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்கள், அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத காரணத்தினால், பேரவை அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.